## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக (திருத்தச்) சட்டம்

---

*(1997, ஒகத்து மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1997, ஒகத்து மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 3.80 தபாற் செலவு: ரூபா 2.50

## 1997 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக (திருத்தச்) சட்டம்

*[1997 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*ச. வ.—ஓ. 3/94*

### 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "நிதி, திட்டமிடல் என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உள்நாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "திட்டச் செயற்பாடு என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "நிதி என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "உயர்கல்வி என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "திட்டமிடல் என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "உண்ணாட்டு அலுவல்கள் என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உயர்கல்வி என்னும் விடயத்திற்குப்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(5) அவ்வுட்பிரிவின் (எ), (ஏ) என்னும் பந்திகளை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :–

"(எ) மாகாணசபை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் ;

(ஏ) அமைச்சரின் அபிப்பிராயப்படி தனியார் துறையில் முகாமைத்துவத்தில் இனங்காண கீர்த்தி பெற்றுள்ளவர்களான இரண்டு ஆட்கள் ;

(ஐ) பகிரங்கத் துறையில் முகாமைத்துவத்தில் முக்கியமான பதவிகளை வகிக்கின்றவர்களான அல்லது வகித்திருந்தவர்களான இரண்டு ஆட்கள் ; அத்துடன்

(ஒ) அப்போதைக்கு நிறுவகத்தின் பணிப்பாளராகப் பதவிவகிப்பவரும் பேரவையின் அவை கூட்டுநராகப் பணியாற்றவேண்டியவருமான ஆள் :

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் (அ) முதல் (எ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவை ஒரு அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளவிடத்து, அமைச்சரானவர், முதலில் குறிப்பிடப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேலதிகமாக, இயைபான விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள மேலதிகச் செயலாளரை பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பதற்கென நியமிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஆறாம் பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறாம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஐ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.